மாலை முரசு

பக்கங்கள் 16+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 16 வெள்ளிக்கிழமை 28.02.2025 | அதிர்வு 212

## யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை இரவு இணைய வழியில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை இரவு 8 மணிக்கு இணைய வழியில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



CLICK HERE VIDEO



# “சாந்தன் துயிலாலயம்” வடமராட்சியில் திறப்பு

(எஸ்.ரகுதீஸ்)

“சாந்தன் துயிலாலயம்” இன்று வெள்ளிக்கிழமை சாந்தனின் தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அத்துடன் சாந்தனின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றது.

யாழ். வடமராட்சி, எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில் சாந்தனின் குடும்பத்தினரால் ”சாந்தன் துயிலாலயம்” அமைக்கப்பட்டுள்ளது.

சாந்தனின் தாயார் அந்தத் துயிலாலயத்தைத் தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து திறந்துவைத்தார். 02▶



### வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால்

# இரண்டாவது நாளாகவும் யாழ். போதனா முடக்கம்!

### நோயாளர்களைக் காப்பாற்றுமாறு பலரும் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தமது தொழிற்சங்க நடவடிக்கையை இன்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுத்து வருகின்றனர். 03▶



# “சாந்தன் துயிலாலயம்” வடமராட்சியில் திறப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அரசுகளாலும், அரசியலாலும், சட்டத்தாலும், கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்று அடையாளமாக “சாந்தன் துயிலாலயம்” அமைக்கப்பட்டுள்ளது என்று சாந்தனின் குடும்பத்தினர் தெரிவித்தனர்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பால்காலமானார். அவரதுவிடுதலைக்காக அவரது குடும்பத்தினர் 33 வருடங்களாகப் போராடி வந்தனர்.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தனை மீள இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அவரது குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாகப் போராடினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் பலரும் பாராமுகமாகச் செயற்பட்ட நிலையில், இலங்கை ஜனாதிபதி, பிரதமர் முதல் இந்திய அரசியல் தலைவர்கள் முதல் சாந்தனின் விடுதலைக்காக அவரது குடும்பத்தினர் மன்றாடி வந்த நிலையில், எவரும் கண்டுகொள்ளாத நிலையில், அவரது உயிரற்ற உடலையே இலங்கைக்குக் கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெற்ற “சாந்தன் துயிலாலயம்” திறப்பு நிகழ்வில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலையான முருகனும் கலந்துகொண்டார்.









# மார்ச் 17 தொடக்கம் 26 வரை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 26 வரை நடைபெறும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலையின் அதிபருக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் மார்ச் 7 திகதி முதல் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.doenets.lk ஐப் பார்வையிட்டு அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அனுமதி அட்டையில் உள்ள பாடம், மொழி மற்றும் பெயரில் மாற்றங்களைச் செய்ய விரும்பினால், மார்ச் 10 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை https://onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு மாற்றங்களை இணையதளத்தின் ஊடாக செய்ய வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# செம்மணியில் மீட்கப்பட்டவை மனித எலும்புத் துண்டுகளே!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி சித்துப் பாத்தி இந்து மயானத்தில் மீட்கப்பட்ட வற்றில் பெரும்பாலானவை மனித எலும்புத் துண்டுகள் என்று சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று முறைப் பாட்டாளர்களில் ஒருவரான கிருபா கரன் தெரிவித்தார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் மின் தகன மேடை அமைப் பதற்காக அத்திவாரம் வெட்டும்போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டன.

அதனையடுத்து அத்திவாரம் வெட் டும் பணியை ஒப்பந்தக்காரர் நிறுத்தி யிருந்தனர். இந்நிலையில், அந்தப் பகுதியில் மேலும் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் இருக்கலாம் என்றும், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அரி யாலை பகுதியைச் சேர்ந்த இருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலி ஸார் குறித்த விடயத்தை யாழ். நீ-திவான் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதை அடுத்து சம்பவ இடத்துக்கு கடந்த வாரம் நீதிவான் விஜயம் மேற்கொண்டிருந்தார்.



அதன்போது, சட்ட வைத்திய அதி காரி, பொலிஸார், தடயவியல் பொலி ஸார்,நல்லூர் பிரதேச செயலர் ஆகி யோரும் சம்பவ இடத்தில் பிரசன்ன மாகியிருந்தனர்.

அந்தப் பகுதிகளை ஆராய்ந்த பின் னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதிவான், மீட்கப்பட்ட எலும்புத் துண்டுகளைப் பகுப் பாய்வுக்கு அனுப்புமாறும், ஏனைய பகுதிகளை ஸ்கானர் இயந்திர உதவி யுடன் முழுமையாகப் பரிசோதனை செய்யவும் நீதிவான் கட்டளையிட்டிருந் தார்.

அந்நிலையில் குறித்த வழக்கு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதி வான் நீதிமன்றில், விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டபோது, சட்ட வைத்திய அதிகாரியால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் , மீட்கப்பட்ட எலும்புத் துண்டு மாதிரிகள் பெரும்பலானவை மனித எலும்புத் துண்டுகள் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து நீதிவான் எதிர்வரும் 4ஆம் திகதி மன்றில் கலந்துரையாடலை மேற்கொண்டு, காலநிலையையும் கருத்தில்கொண்டு ஸ்கானிங் மூலம் அந்தப் பகுதிகளை ஆய்வு செய்யும் அடுத்த கட்ட நடவடி-க்கைகளை முன்னெடுக்கலாம் எனக் கூறினார் என எலும்புத் துண்டுகள் மீட்க-ப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த கிருபாகரன் என்பவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# இரு சகோதரர்கள் குத்திப் படுகொலை

பத்தேகமவில் இரண்டு குழுக் களுக்கிடையே இடம்பெற்ற கடும் மோதலில் இரண்டு சகோதரர்கள் கத்தி யால் குத்திக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் மேலும் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரி வித்துள்ள பொலிஸார், குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரண்டாவது நாளாகவும்...**

இதனால் இரண்டு நாட்களாக நோயா ளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்ற நிலையில், நோயா ளர்களைக் காப்பாற்றுவதற்கான நடவ டிக்கையை எடுக்க வேண்டும் என்று பலரும் கோரியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பித்துள்ளனர்.

அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை இன்று இரண்டாவது நாளா கவும் தொடர்கின்றது.

இதனால் சிகிச்சைகளுக்காக வைத் தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளா கின்றனர். அவர்கள் உரிய சிகிச்சை களைப் பெற முடியாது பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு வைத்தியர்கள் தொடர்ந் தும் முன்னெடுத்து வருகின்ற தொழி-ற்சங்க நடவடிக்கையால் நோயாளர்கள் பெரும் ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ள னர்.

எனவே, நோயாளர்களின் நலனைக் கருத்தில்கெண்டு அவர்களைப் பாதிக் காத வகையில் வைத்தியர்கள் செயற்பட வேண்டும் என்று கேட்டுள்ள நோயா ளர்கள், தமக்கான சிகிச்சைகளை நிறுத் தாது வழமை போன்று வழங்குவதற்கு வைத்தியர்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலைமையில், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் வைத்தியசாலையின் நிர்வாகத்தின ருக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் தொடர்ந் தும் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என்றும், இன்று இரவுக்குள் உரிய தீர்வுகள் எட்டப்படலாம் என்றும் தெரியவருகின் றது.

**யாழ்ப்பாணம்...**

யாழ். மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் வரையான கணக்கு அறிக்கையில் ஒதுக்கிய 56 மில்லியன் ரூபா மற்றும் விசேட வீதி அமைப்புக்கான நிதிகள் என்பவற்றுக்குஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதியைப் பெறும் நோக்கி லேயே இரவோடு இரவாக இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஊடக வியலாளர்கள் இணைய வழியில் இணைந்துகொள்வதற்கான எந்தவொரு ஏற்பாட்டையும் மாவட்ட செயலகம் மேற் கொள்ளவில்லை.

இதேநேரம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமும் ஏற்கனவே இணைய வழியில் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஊடகங்களின் இயலாமை

ஒரு விநோதமான மக்கள் இவர்கள், விபரீதமான நாடு இது என்று இலங்கை மக்களையும் இலங்கை தேசத்தையும் மற்றவர்கள் விமர்சிப்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

நாட்டில் தலை போகும் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அரிசியிலிருந்து தேங்காய், உப்பு வரை அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் எகிறிக் கொண்டிருக்கின்றன. ஆட்சிக்கு வரும் போது அளித்த வாக்குறுதிகளை ஆளும் தரப்பு மறந்துவிட்டு, வேறு ஏதோ செய்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத் தலைவிதியைத் தீர்மானிக்கும் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவாதங்களில் அரசு தரப்பினரும் எதிர்க்கட்சியரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் அவை எவையும் நாட்டு மக்களின் கவனத்தை அதிகம் ஈர்க்கவில்லை.

நீதிமன்றுக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகம் குழு தலைவர் கணேமுல்ல சஞ்சீவ, அவரைச் சுட்டுக் கொன்ற முன்னாள் இராணுவக் கொமாண்டோ படையணி வீரர், அவரின் சகாவாக இருந்து இப்போது தலைமறைவாக இருக்கும் செவ்வந்தி பற்றிய செய்திகள் குறித்துத்தான் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்கிறார்கள். அதைப் பற்றிய செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

மக்களின் வயிற்றுப் பசியை - நாட்டின் தலைவிதியை - சமூகத்தின் எதிர்காலத்தை - தீர்மானிக்கும் விடயங்களை விட, இந்த குசுகுசு செய்திகளின் மீதுதான் நாட்டு மக்களின் அவதானம் அதிகம் செல்கின்றது.

நாட்டு மக்கள் என்று மட்டுமல்ல, பெரும்பாலான ஊடகங்களின் பசிக்குத் தீனியாவதும் இந்த விடயம்தான்.

நாட்டின் பொருளாதாரத்தைச் சின்னாபின்னமாக்கிய ஊழல் விவகாரங்கள், நாட்டைச் சீரழித்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள், அது தொடர்பான விசாரணைகள், பெரும் தொகையைச் சூறையாட முயற்சிக்கப்பட்ட பிணைமுறி ஊழல் இவை குறித்தெல்லாம் செய்திகள் வெளியாகி வந்தாலும், அவற்றை கவனிப்பதில் சாதாரண பாமரனுக்கோ ஊடகங்களுக்கோ ஈடுபாடு அதிகம் இல்லை.

நீதிமன்றத்துக்குள் நடந்த தாக்குதல் நாட்டின் பாதுகாப்பின் பெரும் பின்னடைவைச் சுட்டும் விடயம். பாதாள உலகம் குழுக்களின் ஆதிக்கம் வலுவாக ஸ்திரப்பட்டிருப்பதை வெளிப்படுத்தும் சம்பவம். பல்லாயிரம் இயந்திரத் துப்பாக்கிகளுடன் பல பாதாள உலகம் குழுக்கள் மும்முரமாக - வீரியமாக - அடக்க முடியாதவையாக - செயற்பட்டு கொண்டிருக்கின்றன.

அவை பற்றி எல்லாம் மக்களும் ஊடகங்களும் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அதைவிட பாதாள உலகம் சம்பந்தமான கிசுகிசு செய்திகளுக்கும் அவற்றின் ஆலாபரணங்களுக்கும்தான் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

தொழில்நுட்ப ரீதியில் உச்சகட்டத்தை அடைந்திருக்கும் ஊடகத்துறையின் பெறுப்பேற்றுச் சீத்துவம் இதுதான்.

நாட்டுக்கு அவசியமான - மிக முக்கியமான - தவிர்க்க முடியாத - விடயங்களில் நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க முடியாத நிலையைத்தான் இந்த ஊடகத்துறை இப்போது கொண்டு வந்திருக்கின்றது.

சமூக ஊடகங்கள் என்ற பெயரில் எழுந்திருக்கும் ஆபத்து இதுதான்.

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் பால் மக்களினதும், அரசியல் தலைவர்களினதும் கவனத்தைத் திருப்புவதற்கான வழி முறைகளை ஊடகங்கள் கையாள வேண்டும். விசேடமாக கவனிக்க வேண்டும்.





# திருகோணமலை மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளர்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளராக, இலங்கை நிர்வாக சேவை அலுவலர் எஸ்.கே.டீ.நிரஞ்சன் இன்று (27) தமது கடமைகளை ஆரம்பித்தார்.

திருகோணமலை பிரடெரிக் கோட்டை வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அலுவலகத்தில் வைத்து, முன்னாள் மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளர் ஆர்.சசீலனிடம் இருந்து புதிய அலுவலர் கடமைகளை பொறுப்பேற்றார்.

புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளர், 2024 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் இதற்கு முன்னர் கிழக்கு மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவின் உதவி செயலாளராக கடமையாற்றி இருந்தார். திருகோணமலை மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்ட இவர் சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்று, பின்னர் தமது முகாமைத்துவ பட்டத்தை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றிருந்தார்.








# அனைவருக்குமான சம அந்தஸ்தை தேசிய மக்கள் சக்தி அரசு வழங்கும்

## பெருந்தோட்ட மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

**(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)**

தேசிய மக்கள் சக்தி அரசு அனைத்து இன மக்களுக்கும் சகல மதத்தினருக்கும் சம அந்தஸ்தும் சம வாய்ப்பும் வழங்கும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கூறினார்.

புத்த சாசன சமய கலாசார அமைச்சு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் இரத்தினபுரி சைவ பரிபாலன சபை தலைவர் பொன் சிவாஜி தலைமையில் சிவராத்திரி விழா இடம்பெற்றது.

இரத்தினபுரி மாவட்ட இந்து ஸ்வயம் சேவா சங்கமும் இரத்தினபுரி மாவட்ட அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து இந்த முறை இரத்தினபுரி இரத்தினேஸ்வர சிவாலயத்தில் தேசிய சிவராத்திரி விழாவை நடத்தின.

இதில் , விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இவ்வாறு கூறினார்.

புத்த சாசன மற்றும் சமய கலாசார அமைச்சர் சுனில் செனவி பிரதம அதிதியாகவும் இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அனிருத், சபரகமுவ சபையின் முன்னாள் உறுப்பினர் யெஹியா எம்.இப்ளார், முள்ளாய் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ. விஜேதுங்க உள்ளிட்ட பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் கோயில்கள் ,விகாரைகள், கிறித்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட அனைத்து மத ஸ்தானங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

மதம் மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்டது. சகல மக்களும் அதனை மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஸ்டிக்கின்றனர். மதம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நாம் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும். மதங்கள் ஒன்றுக்கொன்று தாழ்ந்ததில்லை. அவ்வாறு நினைக்கவும் கூடாது.

இரத்தினபுரியில் சகல வசதிகளும் கொண்ட கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படும். இதற்காக இந்திய அரசிடம் உதவி கோரப்படும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூடிய விரைவில் இலங்கை வரவுள்ளார் அப்போது அதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் .

அத்துடன் பாரத பிரதமருடன் கலந்துரையாடி மலையகத்தின் அபிவிருத்தி பல் வேறு திட்டங்கள் முன் வைக்கப்படும்.

இரத்தினபுரி சிவன் கோயிலில் சிவராத்திரி விழா தேசிய விழாவாக கொண்டாடப்படுகிறது. அதனை மிகவும் உணர்ச்சி பூர்வமாக வரவேற்கின்றேன். மகிழ்ச்சியடைகின்றேன்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சருக்கும் இந்து திணைக்கள பணிப்பாளர் அனிருத் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்றார்







# அட்டாளைச்சேனை கலைஞர்களுக்கு சுவதம் விருதுகள் வழங்கும் நிகழ்வு

(எம் எப். நவாஸ் )

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாக வருடா வருடம் கலைஞர் சுவதம் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தின் அட்டா ளைச்சேனை பிரதேச செயலக கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் பி.ரி.இர்பான் தலைமையில் பிரதேச செயலகத்தில் (27) இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரம கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.அஸ்றப், எம்.எஸ்.றஜாயா மற்றும் உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அரசாங்கத்தின் 'பட்ஜெட்டை' நாங்கள் வரவேற்கிறோம்!

## ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் யஹ்யாகான்

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மக்கள் சக்தி அரசின் முத லாவது வரவு - செலவு திட்டத்தை ஐக்கிய மக்கள் காங்கிரஸ் வரவேற்றுள்ளது. இது தொடர்பாக கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹ்யாகான் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், அரசியல் எதிர் காலம் இல்லை என்று உணர்ந்துள்ள எதிர்க்கட்சியில் உள்ள சிறுபான்மை கட்சிகள் பட்ஜெட்டை எதிர்க்கின்றன. சூனியமாகிப் போயுள்ள தமது அரசி யல் எதிர்காலத்தை மீண்டும் நிலை நிறுத்த இந்தச் சிறுபான்மைக் கட்சி கள் திட்டமிட்டு மக்கள் மத்தியில்



பட்ஜெட்டுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன.

மக்கள் இன்று இந்த சிறுபான்மை கட்சிகளை வெறுக்க ஆரம்பித்துள்ளனர். இதை கடந்த ஜனாதிபதி மற்றும் நாடா ளுமன்றத் தேர்தல்களில் அவதானிக்க முடிந்தது.

மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்ற னர். மக்கள் பட்ஜெட்டை ஆதரிக்கின்ற னர், வரவேற்கின்றனர். சிறுபான்மைக் கட்சிகளின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இதே வேளை சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவர் சிலரை கூலிக்கமர்த்தி எமது கட்சியையும் அரசையும் விமர்சித்து வருகின்றார்.

போலியான முகநூல் கணக்குகளை உருவாக்கி இதை மேற்கொண்டு வருகிறார். அதனைப் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. அலட்டிக் கொள்ளப் போவதுமில்லை.- என்றார்.





# வெள்ளப்பெருக்கு, கடல் அரிப்பால் சேதமடைந்த சிறுவர் பூங்காவின் புனரமைப்புக்கு நிதியுதவி

(எச் எம் ஹலால்தீன்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் கடல் அரிப்பால் சேதமடைந்த கிண்ணியா சிறுவர் பூங்காவின் பாதுகாப்பு சுவர்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய முதற்கட்டமாக ரூபா 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் புனர் நிர்மான பணிகள் தொடர்பாக ஆராய கிண்ணியா நகர சபை செயலாளருடன் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருந்தார்.

இதன்போது சேதமடைந்த பாதுகாப்புச் சுவர்களையும் உடன் அமைக்கப்பட வேண்டிய இடங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.





# சிலோன் சிங்கர் போட்டி வெற்றியாளர்கள் இந்தியா போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடு!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ். இசை கலையகம் நடத்தும் “மாபெரும் சிலோன் சிங்கர் தேர்வு” போட்டியில் வெற்றி பெறும் வெற்றியாளர்களை இந்திய அனுப்பி போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவுள்ளார் என்று பிரபல தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் புதன்கிழமை நடைபெற்ற “மாபெரும் சிலோன் சிங்கர் தேர்வு” போட்டியில் 60 இற்கும் மேற்பட்ட பாடகர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். அதில் முதல் சுற்றில் தெரிவான பாடகர்களுக்கு இரண்டாம் சுற்று நடைபெற்றது. இறுதி சுற்று ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பிரதேச பிள்ளைகளின் திறமைகளைவெளியுலகத்துக்குக்கொண்டு வருவதற்கு இவ்வாறான நிகழ்வுகள் அவசியமாகும். அந்த வகையில் இந்த நிகழ்வை நடத்துபவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இதில் பலர் மிக நன்றாகப் பாடியுள்ளனர். சிலரின் பாடல்களை கேட்கும் போது என்னையறியாமலே கண்ணீர் வந்தது. அவ்வளவுத்துக்கு அந்த பாடல்கள் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தின.

இங்கு பாடிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.பிள்ளைகள் இந்த மேடையுடன் மாத்திரம் நின்று விடாது தமது திறமைகளை மேம்படுத்தி பல மேடைகள் காண வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மூவருக்கு இந்திய சென்று போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடுகளை செய்து கொடுக்க முயற்சிப்பேன்.– என்றார்.





# முன்பள்ளிகளது ஆசிரியர்களுக்கு சுகாதார அபிவிருத்தி விழிப்புணர்வு

(அபு அலா)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரிவில் இயங்கி வரும் முன்பள்ளி பாடசாலைகளுக்கான சுகாதார அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளச்சேனே சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று (27) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரிவுக்கு உட்பட்ட பிரிவில் இயங்கி வரும் முன்பள்ளி பாடசாலைகளின் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்பள்ளி பாடசாலை எவ்வாறு அமையவேண்டும் எனவும் அந்தப் பாடசாலையில் எவ்வாறான விடயங்கள் அடங்க வேண்டும் என்ற தகவல்களை அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் வழங்கினார்.

சிறுவர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் போன்றவற்றை செய்து கொடுப்பதுடன் அவர்களுக்குத் தேவையான நற்பண்புகள் நல்லெண்ணங்கள் நற் சிந்தனைகள் போன்ற விடயங்களையும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அவர்களுக்குத் தேவையான போசாக்குள்ள உணவுப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயங்களையும் எடுத்துரைத்தார்.



# சாதனையாளர்கள் கௌரவிப்பு!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்ட விசேட தேவையுடையோர் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் நானுஓயா டெஸ்போர்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுகத் டி சில்வா, திட்ட ஆலோசனையாளர் எஸ்.தர்மேந்திரராஜ், நுவரெலியா மாவட்ட சமூக சேவை அதிகாரி பிரியந்த டி சில்வா, அபிவிருத்தி அதிகாரி ஜனக மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.





# தேசகீர்த்தி தேசபந்து விருது வழங்கி கௌரவிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கை சர்வமத நல்லிணக்கம் மற்றும் பரோபகார மன்றத்தினூடாக பூண்டுலோயா பெயாலண்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த கொத்மலை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இராமையா பாரதிராஜா சமூக சேவையாளருக்கான தேச கீர்த்தி தேசபந்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் பெயாலண்ஸ் மற்றும் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் ஆவார்.


# கிழக்கு மாகாண ஆளுநரின் இரு நூல்கள் நாளை வெளியீடு



(அகமது அஃப்கார் முகமது முஹுதர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் சமுத்திரா வெளியீட்டக ஏற்பாட்டில், கிழக்கு மாகாண ஆளுநர் , பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவின், 'விஞ்ஞானத்தினதும் மனித மூளையினதும் மர்மங்கள்', 'ஏரியின் மத்தியில் போர்' ஆகிய இரண்டு நூல்களின் வெளியிட்டு வைக்கப்பட வுள்ளன.

இந்த நிகழ்வு நாளை (01) சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மு.குணநாதன் தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வில் எழுத்தாளர் உமா வரதராஜன் நுலாய்வுரை நிகழ்த்தவுள்ளார்.இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து கலை, இலக்கிய,ஆற்றுகை கலைஞர்களுக்கும் அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.




# 12 லீட்டர் கசிப்புடன் பெண் ஒருவர் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலவக்கரை வீதியில் கசிப்புடன் பெண் ஒருவரை நேற்று வியாழக்கிழமை (27) சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, சூட்சமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 12 லீட்டர் கசிப்புடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரமுனை 01, பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சான்றுப் பொருளுடன் சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கையானது, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தலைமையிலான சார்ஜன் ஏ.ஜி. அநுர, சார்ஜன் வி.டபிள்யூ. அசோக்க உள்ளிட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள்கள் விற்பனை!

## பெற்றோர்கள் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை இடம்பெற்று வருகிறது. நாளாந்தம் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகுவது கல்வித் துறையில் பணியாற்றுவோருக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

இந்த நிலையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கல்முனை வலை கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

மருதமுனை அல் – ஹம்றா வித்தியாலயத்தின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்த நடத்திய, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் நேற்று (27) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய வலயக் கல்வி பணிப்பாளர்,

1978 ஆம் ஆண்டு மருதமுனையை தாக்கிய சூறாவளிக்கு பின்னர் இங்கு ஏற்பட்ட கல்விப் புரட்சி உலகமெல்லாம் மருதமுனை, மருதமுனை என்ற பெயர் பேசப்படுவதற்கு காரணகர்த்தாவாக அமைந்தது.

இந்தக் கல்விப் புரட்சியை மீள உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இன்று மாணவர்களைக் கையடக்க தொலைபேசி பாவனை, போதை வஸ்து பாவனை போன்றவற்றிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது கட்டாயமாகும். அதிபர்கள், ஆசிரியர்கள் இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பெற்றோர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக இரவு பகலாக கண்ணுக்குள் வைத்து குறிப்பாக தங்களுடைய இறக்கைகளுக்குள் வைத்து பிள்ளைகளை கண்காணிப்பது போல் தொடர்ந்தும் அவர்களை அவதானிக்க வேண்டும்.

மாணவர்களின் கட்டிளமைப் பருவம் என்பது அவர்களைத் திசை திருப்பிவிடும். கையடக்க தொலைபேசியால் தம்மை தானே அழித்துக் கொள்ளும் நிலை உருவாகியிருக்கின்றது.

வலயக்கல்வி பணிப்பாளர் என்ற ரீதியில், குறிப்பாக மருதமுனையில் இருக்கின்ற ஏழு பாடசாலைகளுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நாம் பல முயற்சிகளை செய்திருக்கின்றோம்.

லட்சக் கணக்கான ரூபாவை இங்குள்ள பாடசாலைகளின் பௌதீக அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அவற்றை நாம் எதிர்காலத்திலும் முடியுமானவரை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கிறோம்.

ஆனால் மருதமுனையின் கல்வி இன்னொரு பக்கம் திசை மாறி இங்கு வீழ்ச்சி ஏற்படுகிறதா? என்று சிந்திக்க வைக்கிறது. இவை குறித்தும் கல்வித் துறையில் பணியாற்றுகிறவர்கள் சிந்திக்க வேண்டும்.

இன்றைய கௌரவிப்பு என்பது மாணவர்களுக்கான ஒரு ஊக்குவிப்பாகும். எதிர்காலத்திலும் சாதாரண பரீட்சை, உயர்தரப் பரீட்சையில் சிறந்த அடைவுகளைப் பெற்று இன்னும் பல பாராட்டுதல்களை மாணவர்களாகிய நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை மாணவர்கள் கருத்தில் கொண்டு தமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.– என்றார்.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அல்– ஹம்றா வித்யாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அதிதிகளால் பரிசு, நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கல்முனை கல்வி வலயம், அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டமையை பாராட்டி பாடசாலை சமூகத்தினரால் வலயக் கல்வி பணிப்பாளர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பி. எம் நஸ்றுதீன், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.என். எம்.வசீம் உட்பட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# தென்னமரவடியில் பொது மக்களால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாலம்!

## நிரந்தர பாலம் அமைத்துத் தருமாறு கோருகின்றனர் மக்கள்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக 1984 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவடி மக்கள் வலுக்கட்டாயமாக கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள் 26 ஆண்டுகளின் பின்பு 2010 ஆம் ஆண்டில் மீளக் குடியமர்ந்தனர்.

மக்கள் குடியமர்ந்தாலும் அவர்களின் வாழ்வியலுக்காக இருந்த ஒரேயொரு மார்க்கமான வயல் நிலம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட கொக்குத் தொடுவாய் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட அக்கரைவெளி வயல் பகுதி.

அந்த வயல்களுக்கான போக்குவரத்து வசதி இல்லாததால், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது எனவே இங்கே ஓர் பாதை அமைத்து தருமாறு சகல ஆட்சிக் காலத்திலும் கோரிக்கை முன் வைத்தனர்.

பாதை இல்லாதபோதும் வாழ்வியல் சூழ்நிலை கருதி 2020 ஆம் ஆண்டு முதல் தென்னமரவடி கிராமத்தின் இளைய விவசாயிகள் தமது முயற்சியால் வயல் வெளியை மீண்டும் விவசாயத்துக்குத் தயார் செய்தனர். இருப்பினும், இந்தப் பகுதிக்கான முறையான சாலையோ அல்லது பாலமோ இல்லாததால், விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

இதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக 3 கிலோ மீற்றர் நீளமான புதிய பாதை ஒன்று அமைக்கப்பட்டாலும், கடந்த வருடம் ஏற்பட்ட அடை மழை மற்றும் வெள்ளத்தால் வீதியின் பெரும் பகுதியும், விளாத்தியழ பாலமும் முற்றாக சேதமடைந்தன.

இவ்வாறு பாலம் சேதமடைந்தமையால் விதைத்த நெல் அறுவடை செய்ய முடியாத அவலம் ஏற்பட்டது. இந்த சமயத்தில் விவசாயிகள் பெரும் அவதியடைந்தனர்.

தென்னைமரவடி கிராம கமநல அமைப்பால் கனடிய தமிழர் பேரவையிடம் இந்த பாலத்தின் புனர் நிர்மாணத்துக்கு உதவி கோரப்பட்டது.

இந்த கடுமையான சூழ்நிலையை கருத்தில் கொண்டு சி.ரி.சி. விளாத்தியடி இறக்கு பாலத்துக்கான புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கி விவசாயிகளுக்கு தமது வயல் வெளிகளுக்கு தடையின்றி சென்று வரவும் விதைத்த நெல்லை அறுவடை செய்யவும் உதவியது.

தற்போது பாலத்தின் புனரமைப்பு தற்காலிகமாக முடிவடைந்து, விவசாயிகள் தடைகள் இன்றி இந்த பாலத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதற்கான நீண்டகால தீர்வு ஒரு நிரந்தரமான பாலம் ஒன்றை அமைப்பதாகும். அதற்கான முயற்சிகள் எடுத்து நிரந்தரப் பாலம் அமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை முன் வைக்கின்றனர்.

இந்த தற்காலிக பாலம் அமைக்க உதவிய சி.ரி.சி.யின்







நிர்வாக இயக்குனர், உறுப்பினர் மற்றும் இந்த திட்டத்தின் நன்கொடையாளர்கள் புனரமைக்கப்பட்ட பாலத்தைப் பார்வையிட்டனர்.

# யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஊராட்சி முற்ற நிகழ்வு!

(த.சுபேசன்)

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஊராட்சி முற்றம் (மகளிர் குரல்) என்னும் நிகழ்வு நேற்று (27) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

சமூக மட்டப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நிகழ்வாக இது இடம்பெற்றது.

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவி திருமதி ம.தமிழ்ச்செல்வி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகனன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன், கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், உதவி மாவட்ட செயலாளர் தர்ஷினி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது சமூகத்தில் தீர்க்கப்படப்படாத பிரச்சினைகளாக உள்ள வேலணைப் பிரதேச வைத்தியசாலையின் ஆளணிப் பிரச்சினை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், நீதிமன்ற வழக்குப் பதிவின் போதான தாமதமும் அதனால் பெண்கள் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சனைகளும், நுகர்வோர் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் வடிகாலமைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், போக்குவரத்துத் துறை, மின்சார சபை, உள்ளூராட்சி சபை, விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள், யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகளின் சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







கலந்துரையாடலில் பல ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்றும் சில பிரச்சனைகளுக்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளும் துறை சார்ந்த அதிகாரிகளால் வழங்கப்பட்டன எனவும் குறிப்பிடத்தக்து.





# இலங்கையர்களுக்கு இத்தாலியில் அதிகளவான வேலை வாய்ப்புக்கள்

## சபாநாயகருடன் இத்தாலி தூதுவர் பேச்சு

இத்தாலியில் இலங்கையர்களுக்கு அதிகளவான வேலை வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கும் இலங்கைக்கான இத்தாலி தூதுவர் டாமியானோ ஃபிராங்கோவிக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது வர்த்தகம் மற்றும் முதலீட்டுவாய்ப்புகளைவிரிவுபடுத்துதல், சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையர்களுக்கான புதிய வேலை வாய்ப்புகளை கண்டறிதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகளை இத்தாலி தூதுவர் டாமியானோ ஃபிரான்கோவிக் சுட்டிக்காட்டினார்.

இத்தாலியில் வசிக்கும் இலங்கை மக்கள் அந்த நாட்டுப் பொருளாதாரத்துக்கும் இலங்கைக்கு அந்நியச் செலாவணியை அனுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு வழங்கும் பங்களிப்பைப் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு இத்தாலி தூதரகம் தயாராகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தரும் இத்தாலி சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய சபாநாயகர், சுற்றுலாத்துறை தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் நம்பிக்கை வெளியிட்டார்.

வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் வகையில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகள் பற்றியும் சபாநாயகர் தூதுவருக்கு தெளிவுபடுத்தினார்.

# வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் புலம்பெயர் நாட்டில் தஞ்சமடைந்துள்ளார்!

## உயிர் அச்சுறுத்தலே காரணம் எனத் தெரிவிப்பு

வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் ஞா.குணசீலன் தனது குடும்பத்துடன் புலம்பெயர் நாடு ஒன்றில் தஞ்ச மடைந்துள்ளார். வடமாகாண சபை உறுப்பினராகவும், பின்னர் வட மாகாண சுகாதார அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

மாகாண சபை காலம் முடிவடைந்த பின்னர் அரச வைத்திய சேவையில் மீண்டும் இணைந்து கொள்ள முயற்சிகளை மேற்கொண்ட போதும், அரசியல் பழிவாங்கள் காரணமாக அவரது விண்ணப்பம் அரசால் நிராகரிக்கபட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற பொது தேர்தலிலும் போட்டியிடார். எனினும் தொடர்ச்சியாக இவர் பெரும்



பான்மை கட்சியால் அரசியல் ரீதியான பழிவாங்கள்களுக்கும், இடையூறுகளுக்கும், குறிப்பாக அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலக அர ஊழியர் ஒருவரின் கொலை தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் இடம் பெற்று வரும் வழக்கு விசாரணைகளின்போது பிரதான சாட்சியாக பாதுகாப்பு புலனாய்வு பிரிவு திட்டமிட்டு குறித்த வழக்கு விசாரணையுடன் தொடர்புபடுத்தி இவரை அச்சுறுத்தி வந்துள்ளனர் என்றும் இந்த நிலையில் வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் ஞா.குணசீலன் தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் மற்றும் மனவுளைச்சல் காரணங்களால் தனது குடும்பத்துடன் புலம்பெயர் நாடு ஒன்றில் தஞ்சமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





# கவிதை நூல் வெளியீட்டு விழா!

(றிபாஸ்)

நிந்தவூர் ஆசிரியை றியாஸா எம். ஸவாஹிர் எழுதிய "நிலங்களின் வாசம்" கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் அல் மஸ்ஹர் பெண்கள் உயர் பாடசாலையில் நடைபெற்றது.

சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எச்.ஏ.ஷிப்லி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும், இலக்கியவாதிகள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

நூலின் முதல் பிரதியை நூலாசிரியரின் தாயாருக்கு வழங்கி வைத்தனர். சிறப்பு பிரதியை ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஐ.ரீ. காரியப்பர் பெற்றுக் கொண்டார்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களால் நூலாசிரியர் பொன்னாடை போத்திக் கௌரவிக்கப்பட்டார்.



# சீமான் வீட்டின் பாதுகாவலரை இழுத்துச் சென்றனர் போலிஸார்

## 3 பிரிவுகளில் வழக்குப் பதிவு

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டில் ஒட்டப்பட்ட அழைப்பாணை கிழிக்கப்பட்ட விவகாரத்தில், பாதுகாவலரை பொலிஸார் இழுத்து சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

சீமானுக்கு எதிராக நடிகை விஜயலட்சுமி அளித்த புகாரின்பேரில், சென்னை வளசரவாக்கம் பொலிஸார் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். இதை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் சீமான் மனு தாக்கல் செய்தார். ஆனால், வழக்கை ரத்து செய்ய மறுத்த நீதிமன்றம், 12 வாரத்துக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. இது தொடர்பாக அனுப்பிய அழைப்பாணையில் குறிப்பிட்டபடி சீமான் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகவில்லை.

இதையடுத்து, நீலாங்கரையில் உள்ள சீமான் வீட்டின் கதவில் நேற்று



மீண்டும் அழைப்பாணை ஒட்டப்பட்டது. அதில், இன்று ஆஜராகத் தவறினால், கைது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. சிறிது நேரத்தில் சீமான் வீட்டு பணியாளர் ஒருவர் அந்த அழைப்பாணையை கிழித்தெறிந்தார். இதையடுத்து, அவரைக் கைது செய்வதற்காக, நீலாங்கரை காவல் ஆய்வாளர் பிரவீன்ராஜேஷ் மற்றும் பொலிஸார் நேற்று பிற்பகல் சீமான் வீட்டுக்குச் சென்றனர்.

அப்போது, சீமான் வீட்டில் பாதுகாவலராகப் பணியாற்றி வரும் ஓய்வுபெற்ற எல்லை பாதுகாப்புப் படை வீரர் அமல்ராஜ், பொலிஸாரை வீட்டின் உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தினார். இதனால் ஆவேசமடைந்த பொலிஸ் ஆய்வாளர் அவரைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றார். அப்போது, இரு தரப்பினரிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து, அமல்ராஜை பொலிஸார் கைது செய்ய முயன்றதால், அவர்களிடையே மோதல் ஏற்பட்டது. தொடர்ந்து, ஆய்வாளர் உள்ளிட்ட 3 பொலிஸார் அமல்ராஜின் சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்று, பொலிஸ் வாகனத்தில் ஏற்றினர்.

இதற்கிடையில், பாதுகாவலர் அமல்ராஜ் வைத்திருந்த கைத்துப்பாக்கியை நீண்ட போராட்டத்துக்குப் பிறகு அவரிடமிருந்து பொலிஸார் பறிமுதல் செய்தனர். மேலும், அழைப்பாணையை கிழித்ததாக சீமானின் உதவியாளர் சுபாகர் என்பவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

# மீனவர்களை மீட்குமாறு வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் உண்ணாவிரதம்

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும் படகுகளையும் மீட்டு கொடுக்க வலியுறுத்தி தமிழக மீனவர்கள் ஒன்றுகூடி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்த ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து இலங்கை கடற்படை தொடர்ச்சியாக கைது செய்வதை கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும் படகுகளையும விடுதலை செய்ய வலியுறுத்தியும் இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இலங்கை நீதிமன்றத்தால் அபதாரம் விதித்து ஆறு மாதம் முதல் இரண்டு வருடம் வரை சிறையில் உள்ள மீனவர்களையும் மீட்டுக்கொடுக்க இந்திய அரசை வலியுறுத் தியே இராமேஸ்வரம் அடுத்த தங்கச்சிமடத்தில் மீனவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.






# பவன் கல்யாண் குறித்து அவதூறு: நடிகர் போசனி கிருஷ்ண முரளி கைது

பிரபல தெலுங்கு நகைச்சுவை நடிகர் போசனி கிருஷ்ண முரளி ஆந்திர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹைதராபாத்தில் உள்ள நியு சைன்ஸ் காலனி பகுதியில் உள்ள அவரது வீட்டில் இருந்து போசனி கிருஷ்ண முரளியை பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் குறித்து கடந்த ஆட்சியின்போது அவதூறாக பேசினார் என ஜனசேனா கட்சி நிர்வாகி ஒருவர் அளித்த புகாரின் பேரில் போசனி கிருஷ்ண முரளியை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடம் பொலிஸார் 8 மணி நேரத்துக்கும் மேலாக விசா



ரணை நடத்தியுள்ளனர் என கூறப்படுகிறது. மேலும் விசாரணைக்கு அவர் சரியாக ஒத்துழைப்பு தரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆதரவாளர்கள் பலரும் பொலிஸ் நிலையத்துக்கு வெளியே குவிந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

போசனி கிருஷ்ண முரளி, ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் தீவிர ஆதரவாளராகவும், முந்தைய ஆட்சியின் போது ஆந்திரப் பிரதேச திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் நாடக மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ண முரளி 1990 களில் இருந்து தெலுங்கு சினிமாவில் திரைக்கதை எழுத்தாளர், நடிகர், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளராக இருந்து வந்தார். நாகார்ஜூனா மற்றும் சிரஞ்சீவி உள்ளிட்ட நடிகர்களின் படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். ராம் கோபால் வர்மாவின் சில படங்களுக்கும் வசனம் எழுதியுள்ளார். ஏராளமான தெலுங்கு திரைப்படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களிலும் கிருஷ்ண முரளி நடித்துள்ளார்.

# எல்லைப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டி இந்தியாவுடன் இணைந்து பணியாற்றத் தயார்



## சீனா அறிவிப்பு

எல்லைப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டி இந்தியாவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளதாகச் சீன பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கு லடாக் பகுதிகளில் இடம்பெறும் மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகச் சீன பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர் வு கியான் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் பெய்ஜிங்கில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கிழக்கு லடாக் பகுதியில் ஏற்பட்டு வரும் மோதல் நிலையினால் சீன - இந்திய இரு தரப்பு உறவுகள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின் இடையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





# சீன பொருள்களுக்கு மேலும் 10 வீத வரி

## டொனால்ட் ட்ரம்ப் திட்டம்

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் புதிதாக 10 வீத வரியினை விதிக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இம்மாதம் ஆரம்பத்தில் அமுலுக்கு வரும் வகையில் சீன பொருள்களுக்கு 10 வீத வரி விதிக்கப்படுகிறது.

கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மார்ச் 4 ஆம் திகதி முதல் 25 வீத வரி விதிக்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று தெரிவித்துள்ளார்.

இந்த இரு நாடுகளும் எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்காவிட்டால், மார்ச் 4 ஆம் திகதி முதல் மெக்சிகோ மற்றும் கனடா பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

மெக்சிகோ மற்றும் கனடாவிலிருந்து அமெரிக்காவிற்குள் அதிகளவான போதைப்பொருள் வருவதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.


# நேபாளத்தில் நிலஅதிர்வு

நேபாளத்தில் இன்று அதிகாலை 6.1 ரிக்டர் அளவில் நிலஅதிர்வு ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேபாளத்தின் சிந்துபால்சௌக் மாவட்டத்தில் உள்ள பைரவகுண்டா பகுதியில் இன்று அதிகாலை 2.51 அளவில் இந்த நிலஅதிர்வு உணரப்பட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலஅதிர்வு இந்தியா, திபெத் மற்றும் சீனாவின் எல்லைப் பகுதிகளிலும் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நிலஅதிர்வால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.



கனடா முரசு
வெள்ளிக்கிழமை 28/02/2025

### கனடாவில் சிறுவன் மீது இளம்பெண் கத்திக் குத்து

கனடாவின் நோவா ஸ்கொஷியா மாகாணத்தின் தலைநகரான ஹாலி:பாக்ஸ் நகரில், ஆறு வயது சிறுவன் ஒருவனை கத்தியால் குத்திய குற்றச்சாட்டில் இளம்பெண்

02



# அதிகளவு புலம்பெயர்ந்தோரை 2024 இல் நாடு கடத்தியது கனடா

2024 ஆம் ஆண்டு கனடா மிக அதிகளவானவர்களை நாடு கடத்தியுள்ளதாகவும், அவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில் அனேகமானவர்கள் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ரொய்ட்டர் வெளியிட்டுள்ள செய்தியில், கனடா கடந்த வருடம் அதிகளவானவர்களை நாடு கடத்தியுள்ளது, ஒரு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட காலத்தில் அதிகளவானவர்கள் வெளி யேற்றப்பட்டமை கடந்த வருடம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை கனடா நாடுகடத்தியவர்களின் எண்ணிக்கையை வைத்து பார்க்கும்போது 2015 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த வருடமே கனடா அதிகளவானவர்களை நாடு கடத்தியுள்ளமை புலனாகின்றது.

03

# எல்.ஜீ. நிறுவனத்தின் மின் அடுப்பு பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

உலகின் முதனிலை மின்சார உபகரண உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான எல்.ஜீ நிறுவனத்தின் மின் அடுப்புகள் தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுகாதார நிறுவனம் மற்றும் எல்.ஜீ நிறுவனம் என்பன குறித்த சில வகை மாடல் அடுப்புகளை சந்தையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளன.

அழி முன்புறத்தில் உள்ள பொத்தான்களை தவறுதலாக செயல்படுத்துவதால் தீ விபத்து ஏற்படும் அபாயம் இருப்பதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

இது, பயனர்கள் அல்லது செல்லப்பிராணிகள் தவறுதலாக தொடுவதால் நிகழக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



எல்.ஜீ நிறுவனம் வெளியிட்ட தகவலின்படி, பெப்ரவரி 12 ஆம் திகதி நிலவரப்படி, கனடாவில் இந்த கோளாறு காரணமாக 8 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில், இரண்டு பேர் சிறிய அளவில் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இந்த மின்அடுப்பு திரும்பப்பெறல் 2016 முதல் 2023 வரை தயாரிக்கப்பட்ட பல்வேறு மாடல்களை உள்ளடக்கியுள்ளது. 2016 மே மாதம் முதல் 2024 ஜூன் வரை 1,37,000 மின் அடுப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என கூறப்பட்டுள்ளது.



# கனடா - மெக்ஸிக்கோ மீது வரி விதிக்கும் அமெரிக்கா

கனடா மற்றும் மெக்சிகோ மீது 25 வீத வரி விதிக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

மேலும், சீனாவிலிருந்து வரும் இறக்குமதி பொருள்களுக்கு 10 வீதம் விதிக்கப்படும் வரியை இரட்டிப்பு செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

ட்ருத் சோஷியல் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப், அமெரிக்காவுக்குள் பென்டானில் போன்ற மயக்க மருந்துகள் அதிக அளவில் கடத்தப்படுவதாகவும், இதை தடுக்கவே இந்த வரிகளை அமல்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த கொடூர நிலைமை அமெரிக்காவை தொடர்ந்து பாதிக்க அனுமதிக்க முடியாது. எனவே, இதை முழுமையாக நிறுத்தும் வரை அல்லது கணிசமாக கட்டுப்படுத்தும் வரை, வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 4 முதல் அமலுக்கு வரும் வகையில் வரி விதிப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வரி விதிப்பு அறிவிப்பு ஏற்கனவே உலக பொருளாதாரத்தை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த வரி விதிப்பினால் பணவீக்கம் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா, மெக்சிகோவுக்கு எதிராக 25 வீத வரி, ஆனால் கனடிய எண்ணெய் மற்றும் மின்சாரத்திற்கு 10 வீதம் மட்டுமே வரி விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வரிகளை பல நாடுகள் எதிர்த்துள்ள நிலையில், இது அமெரிக்காவுக்கே பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.





## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருகை தரும் ஹாலிஃபாக்ஸிலுள்ள Scotia Square Mall என்னுமிடத்தில், ஆறு வயது சிறுவன் ஒருவன் கத்தியால் குத்தப்பட்டுள்ளார் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

உடனடியாக அங்கு பொலிஸாரும் மருத்துவ உதவிக்குழுவினரும் விரைய, அந்தச் சிறுவன் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

அந்தச் சிறுவனைக் கத்தியால் குத்திய எலியட் என்னும் இளம்பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் திங்கள் கிழமை ஹாலிஃபாக்ஸ் மாகாண நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், காவலில் அடைக்கப்பட்டுள்ளார். மீண்டும் அவர் மார்ச் மாதம் 13 ஆம் திகதி நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட உள்ளார்.

இந்நிலையில், எலியட்டின் தாயான ஆண்ட்ரியா, தன் மகள் குறித்து சில அதிரவைக்கும் விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

எலியட்டுக்கு மன நலனில் பாதிப்பு உள்ளதாகவும், அவர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார் எனவும் தானும் தன் கணவரும் பல ஆண்டுகளாக பொலிஸார், மருத்துவர்கள், சிறார் பாதுகாப்பு அமைப்பு என பல தரப்பிலிருந்தும் தங்கள் மகளுக்கு உதவி பெற முயன்றுவருவதாகவும் ஆண்ட்ரியா தெரிவித்துள்ளார்.

தங்கள் மகளான எலியட்டால், தங்கள் இன்னொரு பிள்ளைக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடாது என்பதற்காக, எலியட் தங்கள் வீட்டில் வாழவில்லை என்றும், அவர் வீடற்றவராக வெளியில் வாழ்ந்துவந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கத்தியால் குத்தப்பட்ட சிறுவனுடைய நிலைமை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.




# ஒன்றாரியோவில் நிலவும் கடும் பனிப்பொழிவு: மாகாண தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு

கனடாவின் ஒன்றாரியோ மாகாண தேர்தல் இந்த வாரம் நடைபெறவுள்ள நிலையில், நகரம் முழுவதும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக சில வீதிகள் பனியில் மூழ்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒட்டாவா, டொரொன்டொ உள்ளிட்ட நகரங்களில் பனிப் பிரச்சினை தொடர்பாக உள்ளூராட்சி அதிகாரிகளுடன் நெருக்கமாக இணைந்து பணிபுரிந்துவருகிறோம் என ஒன்றாரியோ தேர்தல் நிறுவனத்தின் ஊடக பிரதானி க்ரெக் ஃப்ளட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாக்களிப்பு மையங்கள் எங்கு அமைந்திருந்தாலும் அந்த இடங்களில் மக்கள் எளிதாக அணுகக்கூடிய சூழல் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வாக்களிப்பு மையங்களுக்குச் செல்லும் பாதைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பது முக்கிய முன்னுரிமையாக கருதப்படுவதாக டொரொன்டொ நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பனி அகற்றும் பணிகள் விரைவாக மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி சாலைப் பராமரிப்பு குழுக்கள், குளிர்கால பராமரிப்பு ஒப்பந்ததாரர்கள், பூங்கா மற்றும் மகிழ்ச்சி துறை அதிகாரிகள் இணைந்து பணிபுரிகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திலேயே 71 செ.மீ. பனி குவிந்துள்ளது எனவும் இது கடந்த ஆண்டு முழுவதும் பெய்த பனியை விட அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலநிலை பாதிப்புக்கள் குறித்து அச்சம் கொண்டவர்கள் முன்கூட்டியே வாக்களிப்பு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## அதிகளவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு கடத்துவதற்காக அதிகளவு நிதியை கனடா அரசாங்கம் கடந்த வருடம் ஒதுக்கியிருந்தது.

புகலிடக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் கனடாவில் வீடுகளிற்கான தட்டுப்பாட்டினை புலம்பெயர்ந்தவர்களின் வருகை அதிகரிக்கின்றது என்ற சர்ச்சை போன்றவற்றை எதிர்கொண்டிருந்த ஜஸ்டின் ட்ருடோ அரசாங்கம்,

தான் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக காண்பிப்பதற்காக புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்துவதை தீவிரப்படுத்தியுள்ளது.

அதேவேளை, 2020 முதல் புகலிடக்கோரிக்கைகளை பதிவு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாகவே நாடு கடத்தல்களை தீவிரப்படுத்தவேண்டிய நிலையேற்பட்டது என கனடாவின் எல்லை முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் கனடாவிலிருந்து தாமாக வெளியேறியவர்கள், இருதரப்பு உடன்படிக்கையின் கீழ் அமெரிக்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களின் விபரங்களை ரொய்ட்டர்ஸ் கோரியிருந்தது.

இது தொடர்பில் கனடாவின் எல்லை பாதுகாப்பு முகவர் அமைப்பு வழங்கியுள்ள புள்ளிவிபரங்கள் மூலம் 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை 7300 பேரை நாடுகடத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 8வீதம் அதிகமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.